மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: தமிழ் இலக்கிய நயம்

வாரம் - 15

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை T.பேபி ஷாலினி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

# வஞ்சியர் காண்டம்

**பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.**

1. வஞ்சியர் காண்டம் என்ற நாடகத்தை எழுதியவர் யார்? இந்நாடகம் யாரின் இயக்கத்தில் நடிக்கப்பட்டது?
2. பிரளயன் பற்றி சிறு குறிப்பெழுதுக.
3. வஞ்சியர் காண்டம் நாடகத்தினூடாக பிரளயன் கூறவரும் கருத்துக்கள் யாவை?
4. "ஒருமுலை பிய்த்தெறிந்து ஊனமாய் நின்று திருநகர் தீயிட்ட தேவியைப் போற்றுவோம்" இங்கு யாரின், எச்செயல் குறிப்பிடப்படுகிறது?
5. "அரசதிகாரத்தின் அநீதி சிதறச் சிலம்பறைந்து முழங்கிய கோதையைப் போற்றுவோம்" இங்கு யாரின், எச்செயல் குறிப்பிடப்படுகிறது?
6. கண்ணகி, தெய்வம் இல்லை என்பதற்கு பெண்கள் குழு கூறிய காரணங்கள் யாவை?
7. கண்ணகி கோட்டத்திற்கு செல்லும் மக்கள் பாடிக்கொண்டு செல்லும் பாடலின் சாரம்சம் யாது?
8. "காவற்பெண்டு தலையைப் பிடித்தபடி கீழே சரிகிறாள்" இப்படி அவள் சரிவதற்கான காரணம் யாது?
9. கண்ணகியை தெய்வமாக நினைத்து தொழாமல் நின்றவர்கள் யாவர்? அவர்கள் அதற்கு கூறிய காரணம் யாவை?
10. "கொங்கையாற் கூடற்பதி சிதைத்து கோவேந்தைச் செஞ்சிலம்பால் வென்றாளை" இங்கு யாரின்இ எச்சிறப்பு கூறப்படுகிறது?
11. கண்ணகியின் தெய்வக்கோலத்தை யாரெல்லாம் எவ்வாறு வாழ்த்தினார்கள்?
12. கோவலனின் பாத்திரச் சித்தரிப்பு பற்றிக் குறிப்பிடுக.
13. "அய்யோடா கீழே சிதறிய முத்துக்களைப் பொறுக்குங்கள்" இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
14. "அறிந்தோம் அருகன் வழி தங்கள் அறமாகட்டும்" இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
15. "இங்கே வா உன் பெயர் என்ன சொன்னாய்" இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?